பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 05 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இத்தாலி பயணம் இந்தியாவுடனான நீண்டகால நல்லுறவுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

2. புதுதில்லி - மும்பை இடையேயான ரயில் வழித்தடம் முழுவதும் “கவாச்” தானியங்கி பாதுகாப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ 4 நாள் பயணமாக வரும் 23ஆம் தேதி இந்தியா வருகிறார்.

4. சூடானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டனர்.

5. தெற்காசிய கால்பந்து மகளிர் சாம்பியன் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இத்தாலி பயணம் இந்தியாவுடனான நீண்டகால நல்லுறவுக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

ஐந்து நாடுகள் சுற்றுப் பயணத்தின் நிறைவாக பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்றிரவு இத்தாலி தலைநகர் ரோம் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் பிரதமருக்கு இந்திய பாரம்பரிய, கலாச்சார முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியினர் ஏராளமானோர் திரண்டு வந்து பிரதமரை வரவேற்றனர்.

இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி மற்றும் அதிபர் **Sergio Mattarella**-வை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்த உள்ளார்.

தமது இத்தாலி பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா உடனான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தப் பயணம் வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே பிரதமரின் இத்தாலி பயணம் தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாடுகளுக்கு இடையேயான நீண்டகால பன்முக பரிமாணம் கொண்ட நல்லுறவுகள் மேலும் உத்வேகம் அடையும் என்று தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த 2024ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற G7 நாடுகளின் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டார் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற இந்தியா - நார்டிக் நாடுகளின் 3வது உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நார்டிக் நாடுகளுடன் பசுமை தொழில்நுட்பத்தில் ஒத்துழைக்க இந்தியா முடிவெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

மீன்வளத் துறையில் ஐஸ்லாந்து மற்றும் கடல்சார் பொருளாதாரத்தில் நார்வேயின் திறனை இந்தியா பயன்படுத்த உள்ளதாக அவர் கூறினார்.

ஸ்வீடன் நாட்டுடன் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறையிலும், பின்லாந்து நாட்டுடன் தொலைத்தொடர்புத் துறையிலும், டென்மார்க்குடன் சைபர் பாதுகாப்புத் துறையிலும் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

வடக்கு ரயில்வேயில் அடங்கிய புதுதில்லி - மும்பை ரயில் நிலையங்களுக்கு இடையே புதுதில்லி தவிர்த்து, இதர ரயில் நிலையங்களில் முற்றிலுமாக "கவாச்" தானியங்கி பாதுகாப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தில்லி - Palwal வழித்தடத்தில் கவாச் கருவி நேற்று பொருத்தப்பட்டதாக வடக்கு ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக் கருவி பொருத்தப்பட்டிருப்பதன் மூலம் ரயில்கள் மோதலை தவிர்க்க முடியும் என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ 4 நாள் பயணமாக வரும் 23ஆம் தேதி இந்தியா வருகிறார்.

வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் அவர் முதல் முறையாக வருகை தர உள்ளார்.

கொல்கத்தா, ஆக்ரா, ஜெய்ப்பூர் மற்றும் புதுதில்லியில் அவர் சுற்றுப்பயணம் செய்ய இருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் Tommy Pigott தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்தின்போது எரிசக்தி, பாதுகாப்பு, வர்த்தகம், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் உயர் அதிகாரிகளுடன் மார்கோ ரூபியோ விரிவான ஆலோசனை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே புதுதில்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில், QUAD நாடுகளின் கூட்டத்திற்கும் இந்தியா ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜிதன்ராம் மஞ்சி இரண்டு நாள் பயணமாக நாகாலாந்து சென்றுள்ளார்.

திமாபூர் விமான நிலையத்தில் அவரை உயரதிகாரிகள் வரவேற்றனர்.

இன்று நடைபெறும் கூட்டத்தில் பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் திரு. மஞ்சி ஆலோசனை நடத்த உள்ளதாகவும், மத்திய அரசின் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய இருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தில்லியில் உள்ள பிரதமர் அருங்காட்சியகத்தில் பார்வையாளர்கள் இன்று முதல் மகாத்மா காந்தியுடன் **3-D** செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வாயிலாக கலந்துரையாடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**3-D** அவதார் தொழில்நுட்ப உதவியுடன் மகாத்மா காந்தியை நேரலையில் கொண்டு வரும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அருங்காட்சியகத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக ஹாலோ பாக்ஸ் கலந்துரையாடல் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், இந்த வசதி இன்று தொடங்கி வைக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே இந்த அருங்காட்சியகத்தில் சர்தார் வல்லப் பாய் பட்டேல், முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோருடன் பார்வையாளர்கள் கலந்துரையாடக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், மாவோயிஸ்ட்களுக்கும் இடையே நேற்று துப்பாக்கிச் சண்டை நீடித்தது.

மேற்கு சிங்பும் மாவட்டம் **Podahat** வனப்பகுதியில் மாவோயிஸ்ட்கள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையின்போது இருதரப்பினருக்கும் இடையே இந்த மோதல் ஏற்பட்டதாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய ரிசர்வ் காவல் படையினரும் இணைந்து தாக்குதலில் ஈடுபட்டதாகவும், தொடர்ந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் **2** கோடியே **34** லட்சம் ரூபாய் மதிப்பில் **46** வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Dhanasekar — 56 Sec)**

இத்திட்டத்தின்கீழ் வீடு பெற்றுள்ள பயனாளி மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

**(Voice Byte — Beneficiary - 17 Sec)**

<<<<>>>>

சூடானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் **28** பேர் கொல்லப்பட்டனர்.

மேற்கு **Kordofan** மாகாணத்தின் **Ghubaysh** நகரில் உள்ள சந்தையில் கூடியிருந்த மக்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலை ராணுவத்தினர் நடத்தியிருப்பதாக உள்ளூர் அமைப்பு சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

சூடானில் ராணுவத்திற்கும், துணை ராணுவ அதிரடி ஆதரவுப் படையினருக்கும் இடையே கடந்த **3** ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது.

இந்நிலையில் துணை ராணுவப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்கு **Kordofan** பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனிடையே பொதுமக்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்படவில்லை என ராணுவம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நைஜீரியாவில் அமெரிக்கா மற்றும் கூட்டு ராணுவப் படையினரின் தாக்குதலில் இதுவரை **175** ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக ராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது அவர்கள் கொல்லப்பட்டதாக நைஜீரிய ராணுவ செய்தித்தொடர்பாளர் **Samaila Uba** வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மறைவிடம், ஆயுதக் கிடங்குகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் நிதி தலைமையகம் தகர்க்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தெற்காசிய கால்பந்து மகளிர் சாம்பியன் போட்டிகளுக்கான முதற்கட்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**26** பேர் கொண்ட அணியை தலைமைப் பயிற்சியாளர் **Chrispin Chettri** அறிவித்தார்.

கோவாவில் வரும் **25**ஆம் தேதி முதல் அடுத்த மாதம் **6**ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெற உள்ளது.

**26** பேரில் இருந்து **23** பேர் இறுதி அணியில் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் மாலத்தீவு அணியை எதிர்கொள்கிறது.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி **7** விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **220** ரன் எடுத்தது.

மிச்செல் மார்ஷ் **96** ரன்னும், ஜோஸ் இங்லிஸ் **60** ரன்னும் சேர்த்தனர்.

221 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 3 விக்கெட்டை மட்டுமே இழந்து 225 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டரக்காரர் வைபவ் சூர்யவன்ஷி 38 பந்துகளில் 93 ரன் குவித்தார்.

யசஷ்வி ஜெய்ஸ்வால் 43 ரன்னும், துருவ் ஜூரேல் 53 ரன்னும் எடுத்தனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**